# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 232/2023 நாள்.13.3.2026

PW2- திரு.கலியராஜ், த/பெ. திரு. கண்ணையா

1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்கு போட்ட அனுசியா, ரவி அவர்களை எப்படி தெரியும் என்ன உறவு என்றால் அனுசியா எனது மாமியார், ரவி என் மைத்துனர். எனக்கு வழக்கு பற்றி சங்கதி எப்படி தெரியும் என்றால் தெரியாது. அனுசியாவின் மகளை திருமணம் செய்துள்ளேன் என்றால் ஆமாம். நான் வசிப்பது எங்கு என்றால் நடுபடுகை. நடுபடுகையில்தான் வசிக்கிறேன் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வசிக்கும் இடம் வேறு இடம் என்றும் வாதி வசிக்கும் இடம் வேறு என்றும் சொன்னால் ஆமாம். தாவா சொத்துக்கள் யார் விவசாயம் செய்கிறார்கள் என்றால் நான் செய்கிறேன். அவ்வாறு நான்தான் விவசாயம் செய்கிறேன் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாவா சொத்தை விவசாயம் செய்து வருகிறேன் என்று சொல்லுவது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தின் விபரங்கள் எனக்கு தெரியாது என்பதால் நான் அதுபற்றி சொல்லியுள்ள சாட்சியங்கள் ஏற்ககூடியதல்ல என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதி ரவி அனுசியா மகன் என்றால் ஆமாம். எனக்கும் 1ஆம் பிரதிவாதிக்கும் தொடர்பு இல்லை என்றால் ஆமாம். 1ஆம் பிரதிவாதிக்கு எதிராக சாட்சியம் எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. 10 வருடமாக இடத்தை யார் விவசாயம் செய்கிறார் என்றால் நான்தான். அவ்வாறு நான் விவசாயம் செய்கிறேன் என்று வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். 1ஆம் பிரதிவாதிக்கு எந்த ஆண்டு திருமணம் ஆனது என்றால் தெரியாது.

2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் ஆமாம். சாகுபடி செய்கிறேன் என்பதை காண்பிக்க வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேனா என்றால் இல்லை.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.13 15:22:31 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**

**தஞ்சாவூர்.**